TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

8073041

C

1. District : NAMAKKAL மாவட்டம் PS : V&AC காவல்நிலையம் Year ஆண்டு FIR No 13/AC/2018 முதல் தகவல் அறிக்கை எண் Date நாள் 24.11.2018

2. (i) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள் U/S 7(a).
(ii) Act சட்டம்: Corruption (Amendment). Sections பிரிவுகள்
(iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
1) 19.10.2018 At about 3.30PM.
2) 02.11.2018 at about 6.30PM
3) 16.11.2018 at about 5.30PM
4) 20.11.2018 at about 11.00 AM
5) 22.11.2018 at about 04.00 PM

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.11.2018 Time : நேரம் 16.00 Hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-IV 24.11.2018 Time : நேரம் 16.00 Hrs

4. Type of Information : Written/~~Oral~~ : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக WRITTEN

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 40 kms WEST

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Office of the Block Development Officer, Tiruchengode at VaragooramPatti.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. LOGANATHAN (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் SENGODA GOUNDAR

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-60 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் ENGINEER (g) Address : முகவரி D.No. 4/211 Brindavan Nagar, kudi street, kootapalli, Tiruchengode.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Balamurugan, Block Development Officer, Tiruchengode

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / ~~directed~~ A.T. JAI KUMAR Rank ...DSP........... ~~to take up the investigation / Refused investigation / transferred to PS~~............................................on point of ~~jurisdiction~~.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறைப்பீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ......................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறைப்பீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Shreyanth 24/11/2018

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறைப்பீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
A.T. 24/11/18

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24-11-2018 at 18.00 Hrs

Name பெயர் A.T. JAI KUMAR
Rank நிலை ............................ No. எண் ..........
Deputy Supdt. of Police,
V.A.C. NAMAKKAL

• GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 19(HCL-12)p 2

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/AC/2018 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

24.11.2018-ஆம் தேதி சனிக்கிழமை மாலை 16.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, கூட்டப்பள்ளி, குடித்தெரு, பிருந்தாவன் நகரைச் சேர்ந்த செங்கோடகவுண்டர் என்பவரின் மகன் திரு.லோகநாதன் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல். செ.லோகநாதன், வயது-60 த/பெ செங்கோடகவுண்டர், கதவு எண் 42/1 பிருந்தாவன் நகர், குடித்தெரு, கூட்டப்பள்ளி, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். பெறுதல் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல் மாவட்டம். ஐயா, நான் திருச்செங்கோடு கூட்டப்பள்ளி, குடித்தெரு, பிருந்தாவன் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்கல் என்ஜினியர் முடித்துவிட்டு இந்தியாவிலும் பின் சவுதி அரேபியாவிலும், இறுதியாக நைஜீரியாவிலும் தனியார் நிறுவனங்களில் என்ஜினியராக வேலை பார்த்து உள்ளேன். கடந்த 2018 ஜூலை மாதம் சொந்த ஊருக்கு திரும்பி வந்தேன். எனது மனைவி பெயர் சாந்தி. எங்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். அவர்கள் சென்னையில் வசித்து வருகின்றனர். கடந்த 20.12.2007-ஆம் தேதி எனது மனைவி பெயரில் திருச்செங்கோடு-பள்ளிபாளையம் மெயின்ரோட்டில் உள்ள வரகூராம்பட்டி கிராம சர்வே எண்.68/2 உள்ள பிளாட்டுகளில் பிளாட் எண்.11, 17, 18 முறையே 4000, 1770, 1996 சதுர அடி அளவுள்ளவைகளை விலைக்கு வாங்கினோம். அந்த மூன்று பிளாட்டுகளுக்கும் DTCP அப்ரூவல் வாங்க கடந்த 18/8/2018-ஆம் தேதி ஆன்லைன் மூலமாக தலா ரூ.500/- கட்டணம் செலுத்தி அப்ளை செய்தேன். பின் உரிய ஆவணங்களை சேலத்தில் உள்ள நகர் மற்றும் ஊரமைப்புத்துறை அலுவலகத்தில் நேரில் சமர்ப்பித்தேன். அதன்பின் வரகூராம்பட்டி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு எனது மூன்று பிளாட்களுக்கும் DTCP அப்ரூவல் வழங்கப்பட்டுள்ளதாக கடிதம் வந்திருந்ததை தெரிந்து கொண்டேன். அந்த DTCP அப்ரூவல் பதிவு எண் 9145/2018 ஆகும். அந்த கடிதத்தில் அறிவுறுத்தியபடி நான் வரகூராம்பட்டியில் உள்ள திருச்செங்கோடு BDO ஆபீஸ் சென்று எனது மூன்று

பிளாட்டுகளில் பிளாட் எண்.17க்கு கடந்த 4/10/2018-ஆம் தேதி ஆன்லைன் பதிவு நகல், பிளாட் வரைபடம், பத்திர நகல், சிட்டா/பட்டா நகல், ஆதார் கார்டு ஆகியவற்றை விண்ணப்ப மனுவுடன் இணைத்து பஞ்சாயத்து அப்ருவல் செய்வதற்காக விண்ணப்பம் செய்தேன். அதை பெற்றுக்கொண்டு, BDO ஆபீசில் அந்த பிளாட்டுக்கு அப்ருவல் வாங்க எந்தெந்த கணக்கில் எவ்வளவு பீஸ் கட்டவேண்டும் என்று கணக்கு எண் மற்றும் தொகை ஆகியவற்றை சொன்னார்கள். அதன்படி 17-ம் எண் பிளாட்டுக்கு உரிய தொகையை 5/10/2018-ம் தேதி சம்பந்தப்பட்ட கணக்குகளில் கட்டிவிட்டு ரசீதுகளை BDO ஆபீசில் கொடுத்தேன். அதேபோல் கடந்த 12.10.2018-ம் தேதி பிளாட் எண்.11 மற்றும் 18 ஆகியவற்றிற்கு அதற்குரிய தொகைகளை சம்பந்தப்பட்ட கணக்குகளில் கட்டிவிட்டு அந்த ரசீதுகளுடன் அன்று மாலை சுமார் 3.30 மணிக்கு BDO ஆபீஸ் சென்று BDO திரு.பாலமுருகன் அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்தேன். அவர் அதை அலுவலகத்தில் கொடுக்க சொன்னார். மேலும் என்னிடம் உங்க பிளாட்டுகளை பார்க்க நேரில் வரவேண்டும் எனக்கு ஒரு பிளாட்டுக்கு ரூ.4,000/- வீதம் மொத்தம் ரூ.12,000/-ம் தனியாக கொடுங்க. அதன்பின் ஆர்டர் வாங்கிக்கலாம் என்று சொன்னார். நான் எனது அப்ளிகேசனை சம்பந்தப்பட்ட நகல்களுடன் BDO ஆபீசில் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். அதன்பின் ஒரு வாரம் கழித்து BDO திரு.பாலமுருகன் அவர்கள் எனது பிளாட்டுகளை வந்து பார்வையிட்டு சென்றார். அப்பொழுது என்னிடம் நான் சொன்னபடி பணத்துடன் வந்து பாருங்க ஆர்டர் வாங்கிக்கலாம் என்று சொன்னார். அதன்பின் கடந்த 2.11.2018-ம் தேதி மாலை சுமார் 6.30 மணிக்கு BDO திரு.பாலமுருகன் அவர்களை சந்தித்து எனது பிளாட்டுகளுக்கான அப்ருவல் ஆர்டர் கேட்டேன். அவர் டேபிள் மீதிருந்து எனது பைலை எடுத்து பார்த்துவிட்டு கையெழுத்து போடச் சென்றவர் பணம் கொண்டு வந்திருக்கீங்களா என்று கேட்டார். நான் கொண்டு வரவில்லை என்று சொன்னேன். உடனே எனது பைலை மூடி வைத்துவிட்டு, மத்தவங்கக்கிட்ட ஒரு பிளாட்டுக்கு ரூ.5,000/-ம் வாங்கறேன், உங்களது 3 பிளாட்ங்கிறதால தலா ரூ.4,000/-ம் வீதம் மொத்தம் ரூ.12,000/-ம் கேக்கிறேன். அந்த பணத்தை கொடுங்க ஆர்டர் வாங்கிக்கலாம் என்று சொன்னார். அதனால் திரும்ப வந்துவிட்டேன். அதன்பின் இரண்டு மூன்று முறை அவரை பார்க்க போன போதும், நான் சென்ற சமயங்களில் BDO ஆபீசில் இல்லை. அதனால் அவரை பார்க்க முடியவில்லை. கடந்த 16.11.2018-ம் தேதி மாலை சுமார் 3.30 மணிக்கு நானும் எனது

மனைவி சாந்தியும் BDO அலுவலகம் சென்று BDO திரு.பாலமுருகன் அவர்களை சந்தித்து எங்களது பிளாட்டுக்கான அப்ரூவல் ஆர்டர் கேட்டோம். அப்பொழுது அவர் பணம் கொண்டு வந்தீங்களா என்று கேட்டார். நான் பணம் கொண்டு வரவில்லை என்று சொன்னேன். அதற்கு நான் கேட்ட பணத்துடன் வாங்க ஆர்டர் வாங்கிக்கலாம் என்று சொன்னார். அதன்பின் மீண்டும் கடந்த 20.11.2018-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு BDO அலுவலகம் சென்று BDO திரு.பாலமுருகன் அவர்களை நேரில் சந்தித்து எனது வீட்டு மனை அப்ரூவல் ஆர்டர் குறித்து கேட்டேன். மேலும் அவர் கேட்ட பணம் ரூ.12,000/- ரெடி பண்ண முடியவில்லை என்றும் சொன்னேன். அதற்கு அவர் நான் ஆடிட் வர்றவங்களுக்கெல்லாம் செலவு செய்ய வேண்டியிருக்கு, என் சம்பள பணத்திலேயா செலவு செய்ய முடியும் என்று சொன்னார். ஏற்கனவே சொன்னபடி பணத்தை கொடுத்திட்டு ஆர்டரை வாங்கிக்கங்க என்று சொன்னார். மீண்டும் 22.11.2018ம் தேதி மாலை சுமார் 4 மணிக்கு BDO அலுவலகம் சென்று BDO திரு.பாலமுருகன் அவர்களை நேரில் சந்தித்தபோது அவர் என்னை பார்த்தவுடன் பணம் கொண்டு வந்தீங்களா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.12,000/-ம் கொடுத்திடுங்க. நான்தான் ஏற்கனவே சொன்னேனே, மத்தவங்ககிட்ட ஒரு பிளாட்டுக்கு ரூ.5,000/-ம் வாங்கறேன். உங்கள ஒரு பிளாட்டுக்கு ரூ.4,000/- கொடுங்கன்னுதான சொல்றேன் என்று சொன்னார். பின் அவராகவே சரி ஒரு பிளாட்டுக்கு ரூ.3,000/- போட்டு ரூ.9,000/- கொடுத்திடுங்க என்று சொன்னார். நான் அவ்வளவு பணம் ரெடி பண்ணமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் இறுதியாக மொத்தம் ரூ.5,000/- கொடுத்திடுங்க நான் கையெழுத்து போட்டு கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு அப்போதே செக்சனில் கூப்பிட்டு எனது பைலையும், வீட்டு மனை அங்கீகாரம் ரெஜிஸ்டரையும் வாங்கி அவரது டேபிளில் வைத்துவிட்டு என்னை பணத்துடன் வாங்க என்று சொல்லி அனுப்பிவிட்டார். BDO திரு.பாலமுருகன் எனக்கு பின் விண்ணப்பித்தவர்களுக்கு கூட பணம் பெற்றுக்கொண்டு ஆர்டர் வழங்கிவிட்டார். என்னால் அவர் கேட்ட மாதிரி பணம் கொடுக்க முடியாததால் இதுநாள் வரை எனது வீட்டு மனைகளுக்கான அப்ரூவல் ஆர்டரை வழங்கவில்லை. எனக்கு திருச்செங்கோடு ஒன்றிய BDO திரு.பாலமுருகன் அவர்களுக்கு லஞ்சமாக ரூ.5,000/- கொடுத்து எனது வீட்டுமனைகளுக்கான அப்ரூவல் ஆர்டர் வாங்க விருப்பமில்லை. எனவே புகார் கொடுக்கிறேன். நான் ரூ.5,000/- உடன்

BDO திரு.பாலமுருகன் அவர்களை சந்திக்க உள்ளேன். அவர் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) S.Loganathan 24/11/2018.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 24.11.2018-ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.13/AC/2018 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

24/11/18

(A.T. ஜெய் குமார்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.